www.padippakam.com

# சட்டம் ஒரு வன்முறை

அ. மார்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தடா:
# சட்டம் ஒரு வன்முறை

அ. மார்க்ஸ்

வெளியீடு:

மக்கள் சிவில் உரிமைக்கழகம் (பி.யு.சி.எல்.)
புதுவை தென்னார்க்காடு கிளைகள்

படிப்பகம்

www.padippakam.com

தடா: சட்டம் ஒரு வன்முறை
அ. மார்க்ஸ்

முதல் பதிப்பு : பிப்ரவரி, 1995

விலை: ஏழு ரூபாய்

வெளியீடு:
மக்கள் சிவில் உரிமைக்கழகம்
(பி.யு.சி.எல்.) புதுவை தென்னார்க்காடு கிளைகள்

விற்பனை உரிமை:
விடியல் பதிப்பகம்
3 மாரியம்மன் கோயில் வீதி
உப்பிலிப்பாளையம்
கோயமுத்தூர் - 641 015

அச்சு:
எஸ்.எஸ். பிரிண்டர்சு
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

தடாவால்

**கண்ணீரும் செந்நீரும் சிந்திய நன்னெஞ்சங்களுக்குக் காணிக்கை**

படிப்பகம்

# சட்டம் என்பது...

சட்டம் என்பது நம்மைப் பாதுகாப்பதற்கானது அல்ல என்பது நாம் அறிந்ததுதான். நம்மை ஒடுக்குவதற்காகவே போடப் பட்டுள்ள எண்ணற்ற சட்டங்களில் கொடுமையானதாக இருப்பது தடா சட்டம். 1995 மே மாதத்தில் காலாவதியாக இருக்கும் இந்த சட்டத்தினை நீட்டிக்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. மாநிலங்கள் பலவற்றிலும் இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தேசிய மனித உரிமைகள் கமிஷனும் கூடச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு தடா சட்டத்தை வாபஸ் பெறக்கூடாது என்று வெளிப்படையாக அறிவித்திருப்பது மனித உரிமைகளின்பால் அக்கறை கொண்டோருக்கு அதிர்ச்சியளித்துள்ளது. இந்தக் கொடும் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் போன்ற அமைப்புகளும் அமெரிக்க செனட்டர்கள் பலரும் கோரியிருப்பது கவனத்துக்குரியது. சிறுபான்மையினர், தலித்துகள், இன உணர்வு கொண்டோர் முதலியோரை ஒடுக்குவதற்கென்றே உள்ள இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிகளும் கோரி வருகின்றன.

தடா எவ்வாறெல்லாம் மனித உரிமைகளுக்கு எதிராக அமைந்துள்ளது என்பதை விளக்கியும், அதனை ரத்து செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் எழுதப்பட்டுள்ள இந்த நூல் மனித உரிமைகள் குறித்த புரிந்துணர்வைப் பரவலாக்கவும், தடா சட்டத்துக்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்தவும் உதவுமென்று நம்புகிறோம்.

# தடா: சட்டம் ஒரு வன்முறை

சட்டம் ஒரு இருட்டறை என்றுதான் கேள்விப் பட்டிருக்கின்றோம். சட்டம் ஒரு வன்முறை; துப்பாக்கிக் குழலின் மூலமாகவும் வெடிகுண்டுகளைப் பயன்படுத்தியும் மட்டும்தான் வன்முறையை மேற்கொள்ள முடியுமென்பதில்லை. சட்டத்தின் வழியாகவும் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் மேற்கொள்ள முடியும் என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் விளங்குவதுதான் 'தடா' சட்டம். [TATA - Terrorist and Disruptive Activities (Prevention) Act] பயங்கரவாத மற்றும் பிளவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம். இந்திய அரசியல் சட்டமும், இந்திய அரசு கையெழுத்திட்டுள்ள சர்வதேச மனித உரிமை நகல் உடன்பாடுகளும் குற்றம் சாட்டப்படுகிற ஒரு குடிமகனுக்கு வழங்கியுள்ள மனித உரிமை அடிப்படையிலான எல்லாவிதமான சட்ட உரிமைகளையும் குழிதோண்டிப் புதைக்கும் கொடூரமான சட்டம் என்று,

மனித உரிமை அமைப்புகளாலும்,
உச்ச நீதிமன்ற நீதிபதிகளாலும்,
இந்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவராலும்,
சர்வதேசப் பொதுமன்னிப்பு அவையாலும்,

ஐ. நா. மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர்களாலும், இன்று மிகக் கடுமையாகக் கண்டிக்கப்படுகிற ஆள்தூக்கிக் கறுப்புச் சட்டமான 'தடா' என்னென்ன விதமாக இதர குற்றவியல் சட்டங்களிலிருந்து வேறுபடுகிறது என்று முதலில் பார்ப்போம்.

வெள்ளையராட்சியில் நமது மக்கள் மீது ஏவப்பட்ட அன்றைய கொடிய சட்டமாகிய 'ரவுலத்' சட்டத்தைக் காந்தியும் காங்கிரஸ்காரர்களும் எதிர்த்தனர். ஆனால் விடுதலைக்குப் பிந்திய நமது ஆட்சியினர் தொடர்ந்து இத்தகைய தடுப்புக் காவல் சட்டங்களைப் பயன்படுத்தத் தயங்கியதில்லை. 1950ஆம் ஆண்டில் ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று (பிப்ரவரி 25) அன்றைய உள்துறை

## தோன்றிய கதை

அமைச்சர் சர்தார் பட்டேல் அவர்கள் பாராளுமன்றத்தில் தடுப்புக் காவல் சட்டத்(1950)தைக் கொண்டுவந்தார். நிரந்தரமாக அதனை வைத்துக் கொள்ளும் உத்தேசமில்லை எனவும் மறுபரிசீலனை செய்யப்படும் எனவும் அன்று அறிவிக்கப்பட்டதெனினும், வாக்குறுதி அளித்தபடி மறுபரிசீலனை என்றுமே செய்யப்படவில்லை.

www.padippakam.com

பின்னர் இதுவே இன்னும் பல கொடூரமான அம்சங்கள் இணைக்கப்பட்டு 'மிசா' சட்டமாக (Maintenance of Internal Security Act) 1971லும் பின்னர்த் தேசியப் பாதுகாப்புச் சட்டமாக (National Security Act - NSA) 1980-லும் மாற்றியமைக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயே இத்தகைய தடுப்புக் காவல் சட்டங்களென்பன சனநாயகச் சட்ட நெறிமுறைகளுக்கு விரோதமானவை என நீதிமன்றங்கள் (1950, 1969, 1979) கண்டித்ததையெல்லாம் அரசு கண்டுகொள்ளவில்லை.

1980களில் இந்தியா முழுமையும் ஒரு கொந்தளிப்பான சூழல் நிலவியதை நாம் அறிவோம். இந்தியா முழுவதும் பல்வேறு தேசிய இனத்தினரும், மலையின மக்களும், விவசாயிகளும் பிரிவினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துப் போராடத் தொடங்கியிருந்தனர். கடும் அடக்குமுறைகள் மூலம் அரசு இவற்றை எதிர்கொண்டது. பொற்கோவிலில் தங்கியிருந்த காலிஸ்தான் தீவிரவாதிகளைக் கொன்று குவிப்பதற்கு ராணுவம் அனுப்பப்பட்டதையும் அதனைத் தொடர்ந்து பஞ்சாபில் தீவிரவாதம் மேலும் வலுப்பெற்றதையும் நாம் அறிவோம். இந்தச் சங்கிலித் தொடரின் ஓர் கண்ணியாக அன்றைய பிரதமர் இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டதும் (1984) அதனையடுத்து நான்கு நாட்கள் டெல்லியில் அரசு ஆதரவுடன் நடைபெற்ற வன்முறையில் 2733 சீக்கியர்கள் கொல்லப்பட்டதும், இதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததும் நினைவிருக்கலாம். டெல்லி நகரக் காவல்துறையும் பிரபலமான காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சிலரும் முன்னின்று நடத்திய அந்த வன்முறை தொடர்பாக ஒரு விசாரணைக் கமிஷனை அமைப்பதற்கே ஆறு மாதம் ஆகியது. இந்தப் பின்னணியில்தான் 1985 மே 10, 11தேதிகளில் டெல்லி நகரில் பொது இடங்களிலும், பேருந்துகளிலும் தொடர்ச்சியாக வெடிகுண்டுகள் வெடித்து ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து ஒரு வாரத்தில் (மே 18, 1985) பாராளுமன்றத்தில் அன்றைய சட்ட அமைச்சர் **அசோக்சென்**-னால் 'தடா' சட்டம் கொண்டு வரப்பட்டது. காலிஸ்தானி பயங்கரவாதம் ஒரு புதிய கட்டத்தை எட்டியுள்ளதாகவும், இதனால் விளைந்துள்ள அசாதாரணச் சூழலைச் சாதாரணச் சட்டங்களின் மூலம் சமாளிக்க இயலாது எனவும், இதனால் 'தடா' சட்டம் கொண்டு வரப்படுகிறது எனவும், இது மிகவும் தற்காலிகமானதுதான் எனவும் இரண்டே இரண்டு யூனியன் பிரதேசங்களிலும் (**டெல்லி, சண்டிகார்**) நான்கே நான்கு மாநிலங்களிலும் (**பஞ்சாப், அரியானா, உ பி., ராஜஸ்தான்**) மட்டுமே இச்சட்டம் பிரயோகிக்கப்படும் எனவும் அரசு உறுதியளித்தது. கடுமையான எதிர்ப்புகள் எதுவுமில்லாமல் கிட்டத்தட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் ஒப்புதலுடனும் 'தடா' சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.



படிப்பகம்

ஆனால் அரசு கொடுத்த வாக்குறுதிகள் இரண்டையும் நிறைவேற்றவில்லை. அடுத்த இரண்டாண்டுகளில் சட்டம் திரும்பப் பெறப்படவில்லை. மாறாக இன்னும் கொடுமையான பிரிவுகள் இணைக்கப்பட்டு 1987-ல் மேலும் இரண்டாண்டுகள் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இவ்வாறே 1989 லும், 1991 லும் கடைசியாக 1993லும் இரண்டிரண்டு ஆண்டுகளாகத் 'தடா' சட்டம் நீட்டிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. இரண்டே இரண்டு மாநிலங்களில் மட்டும்தான் பிரயோகிக்கப்படும் என்கிற வாக்குறுதியும் கடைப்பிடிக்கப்படவில்லை. 1987-ல் மேலும் இரு மாநிலங்களும் 1989-ல் மேலும் 13 மாநிலங்களும் தடாவின் வீச்சிற்குள் கொண்டுவரப்பட்டன. இன்று **ஒரிஸ்ஸா, சிக்கிம்** ஆகிய மாநிலங்கள் தவிர மற்ற 23 மாநிலங்களிலும் தடா பிரயோகிக்கப்படுகிறது. **புதுச்சேரி** உட்பட்ட ஐந்து சின்னஞ்சிறு யூனியன் பிரதேசங்கள் மட்டும் விதிவிலக்கு. சனத்தொகை அடிப்படையில் சொல்வதானால் எண்பது கோடி மக்கள் 'தடா'வின் வீச்சுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளரர்கள்.

அரசு அன்று கூறியது போல காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிராக மட்டும் 'தடா' பிரயோகிக்கப் படவில்லை.

- ❋ குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாட்டில் ஏராளமான இசுலாமியர் மீதும்-
- ❋ ஆந்திராவிலும், மகாராஷ்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் மலையின மக்கள் மீதும்-
- ❋ தேசிய இன உரிமைப் போராளிகள், நக்சலைட்டுகள் ஆகியோர் மீதும்-
- ❋ குஜராத்தில் போராடும் 'ரிலையன்ஸ்' மில் தொழிலாளர்கள் மீதும்-
- ❋ பாலகோபால், நாகரி பாபய்யா போன்ற மனித உரிமைப் போராளிகள் மீதும்-
- ❋ வரவரராவ், சயீத்சிதிக், அல்ஹஸ்நஸ் அன்சாரி, காலித் அன்சாரி, பெருஞ்சித்திரனார், விடி. ராஜசேகர் செட்டி போன்ற பத்திரிகையாளர்கள் மீதும்-
- ❋ அர்மீத்சிங், ஜக்மோகன், தலீப் சிங், நெடுஞ்செழியன் போன்ற பேராசிரியர்கள் மீதும்-
- ❋ பிரேம்சிங், சந்து மஜ்ரா, சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்ற முன்னாள் அமைச்சர்கள் மீதும்-
- ❋ நெடுமாறன், கோவை ராமகிருஷ்ணன், வை. ராமச்சந்திரன் போன்ற அரசியல் கட்சித் தலைவர்கள் மீதும்-
- ❋ பல்பீர்சிங் போன்ற விவசாய இயக்கத் (பாரதீய கிசான் சங்கம்) தலைவர்கள் மீதும்...

* அஜீத்சிங் பெய்ன்ஸ் போன்ற முன்னாள் நீதிபதிகள் மீதும்...
* வீரசேகரன், மருதநாயகம் போன்ற வழக்கறிஞர்கள் மீதும்..
* பிடிக்காத எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும்...
* 15, 12 வயது சிறுவர்கள் மீதும்...
* ஏராளமான அப்பாவிகள் மீதும்...

தடா பாய்ந்துள்ளது.

இங்கே ஒரு முக்கியமான செய்தி குறிப்பிடத்தக்கது. எந்த டிரான்சிஸ்டர் வெடிகுண்டு வெடிப்புகளுக்காகத் தடா கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ அந்த வழக்கில் கைது செய்யப்பட்ட முக்கியக் குற்றவாளிகள் யாரும் தடாவின் கீழ் விசாரிக்கப்படவில்லை. கே.எஸ். நரங், மொகிந்தர்சிங் கல்சா, மொகிந்தர் பால்சிங், ஜக்தீஷ்சிங் நரேலா ஆகிய நால்வரும் டெல்லி காவல் நிலையங்களிலேயே 'செத்துப் போனார்கள்.' (1985) இன்னொரு குற்றவாளியாகிய தல்ஜித் சிங் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

அரசு பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள விவரங்களின்படி இன்றுவரை இந்தியா முழுவதும் 'தடா' சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் 67509 பேர். இவர்களில் சுமார் 50,000 பேர் அரசு தொடக்கத்தில் அறிவித்த நான்கு மாநிலங்களில் அடங்காதோர். இவர்களில் பலர் காவல்துறையில் நிருபிக்க இயலாத குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள். குல்தீப்நய்யார் அவர்களின் கணக்கீட்டின்படி சென்ற மே 85 முதல் மார்ச் 93 வரை 'தடா' வில் கைது செய்யப்பட்ட 52,998 பேரில் 434 பேர்களின் மீது தான் குற்றம் நிறுவப்பட்டுள்ளது. அதாவது ஒரு சதத்திற்கும் குறைவானவர்கள்தான் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப் பட்டுள்ளனர். குற்றம் நிருபிக்க இயலாத பல்லாயிரக்கணக் கானோரை இவ்வாறு கைது செய்து பல மாதங்கள், ஆண்டுகள் பிணையில் வெளியே வர இயலாமல் சிறையிலடைக்க எப்படி முடிகிறது? இந்தக் கொடுமையை அரசு எவ்வாறு சட்டப்பூர்வமாக நிறைவேற்றிக் கொள்கிறது? இந்தக் கேள்விகளுக்கு விடை அறிய 'தடா' சட்டத்தின் சில முக்கியமான பிரிவுகளை விளங்கிக் கொள்வது அவசியம்.

**எங்கெல்லாம் செல்லுபடியாகும்?**
**பயங்கரவாதிகளுக்கு வரையறை உண்டா?**

'தடா' சட்டம் நான்கு பகுதிகளாக முப்பது பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. பயங்கரவாதத்தாலும் பிளவு நடவடிக்கை களாலும் பாதிக்கப் பட்ட பகுதி என அரசால் கெசட்டில் அறிவிக்கப்பட்டவுடன் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் மீது 'தடா'வைப் பிரயோகிக் கும் உரிமை அரசுக்கு வந்து விடுகிறது [S.2(1) (f)]. இவ்வாறு

அட்டவணை 1

# தடா கைதிகளின் எண்ணிக்கை

**மொத்தம் 67509**

கேரளா, ஒரிசா, சிக்கிம், நாகலாந்து, டையூடாமன், லட்சதீபம், தத்ரா-நாகர் ஹவேலி, புதுச்சேரி அரசுகள் தடாவைப் பயன்படுத்தவில்லை.

| மாநிலங்களின் பெயர்கள் | தடா கைதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| குஜராத் | 19263 |
| பஞ்சாப் | 15175 |
| அஸ்ஸாம் | 11684 |
| ஆந்திரா | 8692 |
| ஜம்மு-காஷ்மீர் | 2557 |
| மகாராஷ்டிரா | 2219 |
| அரியானா | 1740 |
| மணிப்பூர் | 1480 |
| டெல்லி | 1192 |
| உ.பி. | 1098 |
| மே. வங்கம் | 531 |
| ராஜஸ்தான் | 468 |
| ம.பி. | 355 |
| சண்டிகார் | 253 |
| தமிழ்நாடு | 235 |
| கர்னாடகா | 215 |
| அருணாசலம் | 104 |
| பீகார் | 93 |
| இமாசலம் | 59 |
| திரிபுரா | 47 |
| மிசோரம் | 29 |
| மேகாலயா | 15 |
| கோவா | 4 |
| அந்தமான்-நிகோபாார் | 1 |

குறிப்பு:

அரசு தெரிவித்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதுதான் இந்த அட்டவணை. அரசு தெரிவித்துள்ள புள்ளி விவரங்களில் உள்ளதைக் காட்டிலும் உண்மையில் அதிகம் பேர்கள் தடாவில் சிறையிலுள்ளனர் என பியுடிஆர். போன்ற அமைப்புகள் ஆதாரத்துடன் நிறுவியுள்ளன.

நன்றி : ப்ரண்ட்லைன், செப்டம்பர் 23, 94

www.padippakam.com

ஒரு பகுதியை அறிவிப்புச் செய்வதற்கு எந்த ஒரு அளவுகோலும் வரையறையும் 'தடா' சட்டத்தில் கொடுக்கப் படவில்லை. மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலேயே மைய அரசு எந்த ஒரு பிரதேசத்தையும் 'தடா' பகுதியாக அறிவிக்க முடியும் (S.7). பயங்கரவாத மற்றும் பிளவு நடவடிக்கைகள் குறித்த வரையறைகள் இறுக்கமானவையல்ல. தனிப்பட்ட/ பொதுவான/ வன்முறை சார்ந்த/ வன்முறையற்ற.. பல்வேறு விதமான நடவடிக்கைகளையும் இதற்குள் அடக்கிவிட முடியும். மேடையில் பேசுவதும், பத்திரிகைகள் உள்ளிட்ட தொடர்புச் சாதனங்களில் எழுதுவது அல்லது கருத்துத் தெரிவிப்பதும் கூடப் பிளவு நடவடிக்கையாகக் கருதப்படும் [S.4 (2)]. தடா அல்லாத வேறு சட்டங்களின் கீழான குற்றங்களிலும் கூட அவை தடாவின் கீழான நடவடிக் கைகளுக்குத் துணையாக 'மேற்கொள்ளப்பட்டால்' அவையும் கூட தடாவுக்குள் உள்ளடக்கப்படும். எனவே சாதாரண குற்றங்களுக்காக ஒருவர் கைது செய்யப்பட்டாலும் கூட அவர் மீது 'தடா' இணைக்கப்படும்போது வழக்கு நடவடிக்கைகள் வேறுவிதமாகவும் தண்டனைகள் கடுமையானதாகவும் இருக்க முடியும். பயங்கரவாத நடவடிக்கையில் பங்கு பெறுவது மட்டுமல்ல, அதற்கு உடந்தையாக இருப்பதும் கூடத் 'தடா'வில் கைது செய்யப்படுவதற்குப் போதுமானது. பயங்கரவாத அமைப்புகளில் உறுப்பினராக இருப்பதும் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் சேகரிக்கப்பட்ட சொத்துக்களை வைத்திருப்பதும் கூடக் குற்றங்கள்தான். ஆனால் பயங்கரவாதி, பயங்கரவாத அமைப்பு என்றால் என்ன என 'தடா' சட்டம் எங்கும் கூறவில்லை. பயங்கரவாதி எனத் தெரியாமல் உதவியிருந் தாலும் கூடக் கைது செய்யப்படலாம். சமீபத்தில் வழங்கப்பட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்பில்தான் (மார்ச் 11, 1994) "மனப்பூர்வமான இசைவு" என்பது கைதாவதற்கான நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. மேற்படி உச்சநீதி மன்றம் பெரும்பான்மைத் தீர்ப்பின்படி ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு இது பொருந்தாது. அதாவது பயங்கரவாத நோக்கமில்லாமலே ஆயுதங்கள் வைத்திருந்தாலும் 'தடா'வின் கீழ்த் தண்டிக்க முடியும்.

சாதாரண சட்ட விதிகளின்படி கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் காவல்துறையினர் குற்றம் சுமத்தப்பட்டவரை ஒரு நீதி த்துறை நடுவர் முன் கொண்டு சென்று விசாரணைக்காகக் காவலில் வைக்க அனுமதி பெற வேண்டும். (Cr. P.C.S.167) விசார ணைக்காக அவரைப் போலீஸ் காவலில் வைக்க நடுவர் உத்தர விடலாம். ஆனால் 15 நாட்களுக்கு மேல் போலீஸ் காவலில் வைக்க உத்தரவிடுவதற்கு நடுவருக்கும் அதிகாரமில்லை. தொடர்ந்து காவலில் வைக்க நியாயமான காரணங்கள் இருப்பதாக நடுவர் திருப்தி கொள்ளும் பட்சத்தில் அவரை நீதிமன்றக் காவலில் வைக்க மட்டுமே அவர் உத்தரவிட முடியும். விசாரணைக்காக இவ்வாறு நீதிமன்றக் காவலில் வைப்பதும் கூட 90 நாட்களுக்கு மிகக்கூடாது.

## கைதும் ரிமாண்டும்

கைது செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இத் தகைய நியாயமான சட்ட உரிமைகளையெல்லாம் 'தடா' காற்றில் பறக்கவிடுகிறது. 'தடா'வின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரைக்



படிப்பகம்

காவலில் வைக்க உத்தரவிட நீதித் துறை நடுவர் தேவையில்லை. நிர்வாக நடுவரே - அதாவது வருவாய்த்துறை அதிகாரி ஒருவரே போதும் [S.20(4)(a).20] கைது செய்யப்பட்டவரை 60 நாட்கள் வரை போலீஸ் காவலிலேயே வைத்திருக்க முடியும். [S.20(4) (b)]. குற்றம் என்ன வகையானாலும் கவலையில்லை. 1993-ல் நீதித்துறைக் காவல் ஓராண்டிலிருந்து ஆறு மாதமாகக் குறைக்கப்பட்டது.

மைய, மாநில அரசுகள் 'தடா' வழக்குகளை விசாரிப்ப தற்கெனத் தனி நீதி மன்றங்கள் உருவாக்கிக் கொள்ள முடியும்.

**தனி நீதிமன்றம்**

ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட வழக்குக்கு என இத்தனி நீதிமன்றம் உருவாக்கப் படலாம். உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியின் அனுமதியோடு அப்போது பணிபுரிந்துகொண்டிருக்கிற ஒரு 'செஷன்ஸ்' அல்லது கூடுதல் செஷன்ஸ் நீதிபதியைத் தனிநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க முடியும். தனி நீதிமன்றங்களை அமைப்பதில் இந்தியா முழுவதும் சீரான நடைமுறைகள் கடைபிடிக்கப் படுவதில்லை. சில மாநிலங்களில் மாநிலம் முழுமைக்கும் ஒரே தனி நீதிமன்றமும் ஆந்திரா குஜராத் போன்ற மாநிலங்களில் மாவட்டத்திற்கு ஒரு தனி நீதிமன்றமும் உள்ளன. செஷன்ஸ் நீதிபதிகளை அரசு எளிதில் கட்டுப்படுத்த முடியும். ஓய்வு பெற்ற பிறகும் கூட அந்நீதிபதி தொடர்ந்து பணியாற்ற முடியும் (S.9).

தனி நீதிமன்றம் தனது அமர்வு இடத்தை எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் (S.10). அதாவது சிறையையே வேண்டுமானாலும் நீதிமன்றமாக மாற்ற முடியும். அரசு நினைத்தால் தடா வழக்கொன்றை அந்த மாநிலத்திற்குள்ளேயோ, அல்லது வேறு மாநிலத்திலுள்ள வேறொரு தனி நீதிமன்றத்திற்கோ மாற்ற முடியும் (S.11). தடாவுடன் தொடர்புடைய வேறு வழக்குகளையும் தனி நீதிமன்றம் விசாரிக்கமுடியும் (S.12) தனி நீதிமன்றத்தில் விசாரணை எல்லை குறித்த பிரச்சினை எழும்போது உயர் நீதிமன்றமோ உச்ச நீதிமன்றமோஅல்ல; மைய அரசே இதனைத் தீர்மானிக்க முடியும். இதன் மூலம் நீதிமன்ற அதிகாரம் பறிக்கப்பட்டு நிர்வாகத்திடம் கொடுக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. தடா விசாரணைக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் (S.17) கைது செய்யப்பட்டவர் மீதுள்ள பிற விசாரணைகளை நடத்தாமலே ஒத்தி வைக்க முடியும். வழக்கைத் தொலைவிலுள்ள தனிநீதிமன்றங்களுக்கு மாற்றுவதன் மூலம் கைது செய்யப் பட்டவருக்கும் அவரது உறவினர்கட்கும் எண்ணற்ற துன்பத்தை அளிக்க முடியும்.

அரசு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டாலொழிய மற்றபடி விசாரணை முழுமையும் மூடிய அறைக்குள் இரகசியமாக

நடத்தப்படும். (S.16). கைது செய்யப்பட்டவர்கள் மீது அரசு வழக்குரைஞர் குற்றம் சாட்டிப் பேசுவதை மட்டுமே பத்திரிகைகள் பிரசுரிக்கலாம். குற்றம் சுமத்தப்பட்டவர்கள் சார்பில் முன் வைக்கப்படும் வாதங்கள் வெளியுலகிற்குத் தெரிவிக்கப்பட வேண்டியதில்லை.

**இரகசிய விசாரணையும் அடையாளம் தெரியாத சாட்சிகளும்**

அரசு தரப்புச் சாட்சிகளின் பெயர், முகவரி மற்றும் அடையாளங்களை குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கோ பொது மக்களுக்கோ தெரிவிக்க வேண்டியதில்லை. "எக்ஸ் எனும் சாட்சி உங்கள் மீது இந்தக் குற்றத்தை முன் வைத்துள்ளார். நீங்கள் குற்றமற்றவர் என நிறுவ வேண்டிய பொறுப்பு உங்களுடையது" என அரசு தரப்பில் சொன்னால் போதுமானது. வழக்கு விசாரணை முழுமையையுமோ, ஏதோ ஒரு பகுதியையோ பிரசுரிக்கக் கூடாது எனத் தனி நீதிமன்றம் ஆணையிட்டால் அவற்றைப் பிரசுரிக்கக்கூடாது. மீறிப் பிரசுரித்தால் ஓராண்டுத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் உண்டு. தேவைப்பட்டால் சுருக்க விசாரணை செய்யும் உரிமையும் தனிநீதிமன்றத்திற்கு உண்டு (S.14). சில சந்தர்ப்பங்களில் குற்றவாளியோ அல்லது வழக்குரைஞரோ இல்லாதபோதும் தனி நீதிமன்றம் விசாரணையை நடத்தலாம் [(S.14 (5)].

குற்றம் சுமத்துபவர்கள்தான் குற்றத்தை நிறுவ வேண்டுமென்பது உலகெங்கிலும் ஏற்கப்பட்டுள்ள மிக அடிப்படையான நீதி விசாரணை நெறிமுறைகளில் ஒன்று. தடா சட்டம் இந்த அடிப்படை நெறிமுறைகளையும் குழி தோண்டிப் புதைக்கிறது.

**குற்றமற்றவர் என நிறுவுவது குற்றம் சுமத்தப்பட்டவரின் பொறுப்பு**

கீழ்க்கண்ட ஐந்து சூழல்களில் தான் குற்றமற்றவர் என்பதைத் தடா கைதி தான் நிறுவிக்கொள்ள வேண்டும். அவை. 1. கைதானவரிடமிருந்து ஆயுதங்கள் அல்லது வெடிமருந்து கைப்பற்றப்பட்டு அவை குற்ற நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்புவதற்கான காரணங்கள் உள்ளபோது. 2. குற்றம் நடைபெற்ற இடத்திலோ அல்லது குற்றத்தோடு தொடர்புடைய ஏதொன்றிலோ குற்றம் சாட்டப்பட்டவரின் கைரேகைப் பதிவுகள் இருந்ததாக ஒரே ஒரு நிபுணரேனும் சாட்சி உரைத்துள்ளபோது. 3. குற்றம் சுமத்தப்பட்டுள்ள சக கைதி ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ள போது. 4. போலீஸ் அல்லாத வேறு யாரிடமேனும் குற்றம் சுமத்தப்பட்டவர் வாக்குமூலம் அளித்துள்ளபோது. 5. இதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ள சக கைதி ஒருவருக்கு நிதி உதவி அளித்துள்ளபோது அல்லது நிதி உதவி

அளித்திருப்பார் என சந்தேகப்படக்கூடியபோது.

மேற்குறித்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குற்றம் சுமத்தப்பட்டவர் தன் குற்றமற்ற தன்மையை நிறுவாவிட்டால் அவரைக் குற்றவாளி என நீதிமன்றம் கருதும். தடா சட்டம் உருவாக்கப்பட்டபோது இப்பிரிவு இல்லை. 1987ல்தான் இது சேர்க்கப்பட்டது.

தடா வழக்குகளில் பிணை விடுதலை சாத்தியமில்லை. குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் குற்றவாளியில்லை என நீதிபதி நம்புவதற்கான நியாயமான அடிப்படையிலும், பிணையிலுள்ள போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் குற்றமிழைக்க மாட்டார் என்கிற நம்பிக்கையுள்ளபோதும் மட்டுமே தடாவில் பிணை வழங்கமுடியும் [S.20(8)]. வழக்கு தொடர்பான ஆவணங்களின் அடிப்படையிலேயே நீதிபதி இத்தகைய முடிவுக்கு வரமுடியும். ஆனால் தடா வழக்கில் ஆறு மாதம் வரை விசாரணை தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் போலீஸ் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. பயங்கரவாத நடவடிக்கைக்காகத் தயார் செய்து கொண்டிருந்ததாகக் கைது செய்யப்பட்ட **மோகன் இந்தர் சிங்** (ஜனவரி '88) என்பவர் பிணை விடுதலைக்கு மனு செய்தபோது கனடாவிலிருந்த இரு சாட்சிகளை விசாரிக்காமல் பிணை விடுதலை அளிக்க இயலாது என ஆஜ்மீர் தனிநீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

## பிணையும் மேல்முறையீடும்

தடா வழக்குகளில் தனி நீதிமன்றத்திற்கு அடுத்த கட்ட மேல்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றமல்ல, உச்ச நீதிமன்றத்திற்குத் தான் போக வேண்டும் (S.19). டெல்லியிலுள்ள உச்சநீதிமன்றத்திற்குச் செல்வதென்பது ஒரு சாதாரண குடிமகனைப் பொறுத்த மட்டில் எத்தனை கடினமானது என்பதை விளக்கவேண்டியதில்லை.

**பிமல் கவுர் கல்ஸா** என்பவரது வழக்கில் பஞ்சாப்-அரியானா உயர்நீதிமன்றம் (ஜனவரி 1988) நிர்வாக நடுவர், விசாரணைக்காவல் காலம், பிணை ஆகியவை தொடர்பான 'தடா' விதிகள் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானவை எனத் தீர்ப்பளித்தது. இந்த வரவேற்கத்தக்க தீர்ப்பின்மீது தடையுத்தரவு ஒன்றை மைய அரசு உச்ச நீதிமன்றத்தில் பெற்றது. இதற்கிடையில் இன்னொரு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிணை தொடர்பான விசயங்களின் மீது உயர்நீதி மன்றத்திற்கு நீதி அதிகாரமில்லை எனத் தீர்ப்பளித்தது.

உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதென்பது கூட எல்லா வழக்குகளிலும் சாத்தியமில்லை. தனி நீதி மன்றங்கள் வழங்கிவரும் இடைக்கால ஆணை (Interlocutory Order)யின் மீது

# தடா: ஏன் எதிர்க்க வேண்டும்?

எக்காரணம் கொண்டும் நிரபராதி ஒருவர் தண்டிக்கப் பட்டுவிடக்கூடாது என்பதுதான் உலகெங்கிலும் நீதி வழங்கு நெறிமுறைகளின் அடிப்படையாக இருக்கிறது. உலகெங்கிலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட மனித உரிமை உடன்பாடுகளும் சனநாயக நெறி முறைகளும் அடிப்படையான சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் மனிதர்க்கு வழங்குகிறது. நிறுவப்பட்ட நெறிமுறைகளுக்கு எதிராக யாரொருவரும் கைது செய்யப்படக் கூடாது; காவலில் வைக்கப்படக்கூடாது குற்றம் நிறுவப் படுவதற்கு முன்னதாக பிணையில் வருவதற்கு ஒருவருக்கு உரிமை உண்டு. குற்றம் சாட்டுபவர்கள்தான் குற்றத்தை நிறுவ வேண்டும். குற்றம் சுமத்துபவர்களே நீதிபதிகளாக அமைய முடியாது. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் உரிமை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு உண்டு. தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்யவும், மேல் முறையீட்டுக் காலத்தில் பிணையில் வரவும் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு உரிமையுண்டு என்பன போன்ற அடிப்படையான நீதி வழங்கு நெறிமுறைகளையெல்லாம் தடா எவ்வாறு குப்பையில் கவிழ்க்கிறது என்பதை விரிவாய்ப் பார்த்தோம்.

சர்வதேச அளவில் மனித உரிமைகள் தொடர்பாக (i) சமூக/ பொருளாதார / பண்பாட்டு உரிமைகளுக்கான சர்வதேச நகல் உடன்பாடு எனவும் (ii) குடி/ அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச நகல் உடன்பாடு எனவும் இரு உடன்பாடுகள் 1976-ல் நிறைவேற்றப் பட்டன. 1979 மார்ச் 27 அன்று இந்தியா இவ்விரு உடன்பாடுகளிலும் கையெழுத்திட்டது. எனினும் குடி/ அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்பாட்டின் ஒன்பதாம் பிரிவு தடுப்புக் காவலை முற்றாக மறுக்கிறது என்பதைக் காரணம் காட்டி இந்தியா அப்பிரிவை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியது. ஆனால் மேற்கண்ட உடன்பாட்டின் 14ஆம் பிரிவு கைது செய்யப்பட்டவர் மீதான வழக்கு நியாயமாக நடத்தப்பட வேண்டுமெனச் சொல்கிறது. இதனை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. உடன்பாட்டில் கண்டுள்ள உரிமைகள் மறுக்கப்படும்போது ஒரு குடிமகன் சர்வதேச நீதி நிறுவனங்களில் புகார் செய்து கொள்ள உரிமை அளிக்கும் விருப்ப ஒப்பந்தங்களில் இந்தியா இதுவரை கையெழுத்திடவில்லை. சர்வதேச அளவிலான வணிக ஒப்பந்தங்கள் முதலியவற்றில் கையெழுத்திடுவதில்

**சர்வதேச உடன்பாடுகளுக்கு எதிராகத் தடா**

வணிக ஒப்பந்தங்கள் முதலியவற்றில் கையெழுத்தூடுவதில் முந்திரிக் கொட்டையாக நிற்கும் இந்திய அரசு சர்வதேச அளவிலான மனித உரிமை உடன்பாடுகளில் கையெழுத்திடாமல் ஏமாற்றி வருவது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தையும் கூட மனித உரிமை விசயங்களில் காற்றில் பறக்க விடுவதைக் கவனிக்க வேண்டும். தடா சட்டத்தின் இரகசிய விசாரணை, சாட்சிகளை இரகசியமாய் வைத்திருத்தல் போன்ற பிரிவுகள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான நகல் ஒப்பந்தத்தின் 14ஆவது பிரிவுக்கு எதிராக உள்ளன. நகல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் அவ்வப்போது ஐ. நா. அவையின் மனித உரிமைக் குழுவிற்கு முன்பாக அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும். சென்ற மார்ச் 27, 1991-ல் இவ்வாறு அறிக்கை ஒன்றை இந்திய அரசின் "அட்டர்னி ஜெனரல்" ஜி.ராமசாமி முன்வைத்த போது குழு உறுப்பினர்களான ஜோஸ் ஏகிலார் ர்பினா, ரோஸலின் இக்கின்ஸ், வேகோ, ஸெர்ரானோ கால்டேரா போன்றோர் 'தடா' சட்டத்தை வன்மை யாகக் கண்டித்துள்ளனர்.

சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிராக மட்டுமல்ல இந்திய அரசியல் சட்டம் தனது குடிமக்களுக்கு வழங்கும் பல்வேறு அடிப்படை உரிமைகளையும் 'தடா' சட்டம் குழி தோண்டிப் புதைத்துள்ளது. இந்த வகையில் இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராகச் செயல்படும் முதன்மையான நிறுவனம் இந்திய அரசுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 'தடா' பிரிவுகள் எவ்வாறு இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராக உள்ளன என்பது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. விளக்கம் தேவையில்லை.

**இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிராகத் தடா**

'தடா'வின் மூலம் அரசு, அதிகார வர்க்கம், காவல்துறை ஆகியவற்றின் அதிகாரம் அபரிமிதமாக்கப்படுகிறது. நீதித்துறையின் அதிகாரம் குறுக்கப்படுகிறது. மாநிலங்களின் மீது மைய அரசு தனது எதேச்சாதிகாரத்தை விரிவுபடுத்தும் வாய்ப்பு அதிகமாகிறது. ரெவின்யூ நிர்வாகமும், காவல்துறையும் இணைந்து செயல்பட்டு அரசுக்குப் பிடிக்காத யாரொருவரையும் 'தடா'வில் கைது செய்து நீதித்துறையின் தலையீடின்றி நீண்ட காலம் போலீஸ் காவலிலேயே வைத்திருக்க முடியும். தனி நீதிமன்றம் தொடர்பான எல்லா அதிகாரங்களும் நீதித்துறையைக் காட்டிலும்

**அபரிமிதமான அதிகாரங்களை அரசுக்கு வழங்கும் 'தடா'**

www.padippakam.com

அட்டவணை 2

## 'தடா' சட்டம் பிற சட்டங்களையும் உரிமைப் பிரகடனங்களையும் எவ்வாறு மீறுகிறது?

(தடா சட்டப் பிரிவுகள் இதர சட்டப் பிரிவுகளில் எவற்றிற்கெல்லாம் எதிராக உள்ளன என்பதை விளக்கும் அட்டவணை)

| தடா பறிக்கும் உரிமைகளும் சட்டப்பிரிவுகளும் | குற்றவியல் செயல்முறைத் தொகுப்பு (Cr.P.C.) | அரசியல் சட்டம் | சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் | சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச நகல் உடன்பாடு |
|---|---|---|---|---|
| உடந்தையாயிருத்தல் (abet) பற்றிய வரையறை 2(1) (a) (i) | - | 14, 21 | - | - |
| பயங்கரவாதப் பகுதிகள் பிரகடனம் 2(1) (f) | - | 14, 21 | - | - |
| பயங்கர / பிளவு நடவடிக்கைகள் 3 / 4 வரையறை | - | 14, 19, 21 | 19 | 1 (1), 19 |
| ஆயுதங்கள் வைத்திருத்தல் 5 | - | 14, 21 | - | - |
| கூடுதல் தண்டனைகள் 6 | - | 14 | - | - |
| மாநில அரசின் அதிகாரத்தைப் பறித்தல் 7 | - | பட்டியல் 2 அட்டவணை 7 | - | - |
| சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் 8 | - | 14, 21 | - | - |
| தனி நீதிமன்றம் அமைத்தல் 9 (2) (3), 19, 20 (6) | 374, 482, 48 | 214, 226, 227, 235, 236 பகுதி 5 | - | - |
| ஓய்வு பெற்ற பின்பும் நீதிபதிகள் பதவியில் தொடர்தல் 9 (7) | - | 21 | - | - |



படிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| தனி நீதிமன்ற அமர்வு இடம் 11(1) | – | 21 | – | – |
| வழக்குகளை வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றுதல் 11 (2), (3) | – | 14 | – | – |
| சுருக்க விசாரணை 14 (2) | – | 14, 21 | – | – |
| குற்றவாளி இல்லாமலே விசாரித்தல் 14 (5) | – | 14, 21 | – | – |
| போலீஸ் வாக்குமூலத்தைச் சாட்சியமாக்குதல் 15, 20 (3) | 164 மற்றும் IEA 26 | 20 (3), 50 | 9, 11 | 14(3), 9 |
| இரகசிய விசாரணை 16 (1) | 327 | 14, 19, 21 | 10 | 14(1) |
| இரகசிய சாட்சிகள் 16 (2), (3) | – | 14, 21 | – | 14(3) (e) |
| உயர்நீதி மன்ற மேல் முறையீடு மறுப்பு 19 | – | 19, 21, 226 | – | – |
| நிர்வாக நடுவர்களின் பாத்திரம் 20 (3), (4) | 164, 167 | 50 | 9, 10 | 9 (4) |
| கூடுதல் காவல் காலம், பிணை உரிமைகள் மறுப்பு 20 (4), (7), (8) | 436, 437, 438 | 21, 22, 50 | 9 | – |
| நிரூபிக்கும் பொறுப்பைக் குற்றம் சுமத்தப்பட்டவர்மீது சுமத்துதல் 2 (1) | – | 21 | 11 | 14 (2) |

குறிப்பு: சமீபத்திய உச்ச நீதி மன்றத் தீர்ப்பில் (மார்ச் 1994) 'உடந்தையாயிருத்தல்' பற்றிய வரையறையில் விருப்பபூர்வமாக ஈடுபடுதல் ஒரு நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டுள்ளவரை போட்டோ மூலம் அடையாளம் காட்டுதல் நீக்கப்பட்டுள்ளது.

நன்றி: DUDR வெளியீடுகள், டெல்லி



www.padippakam.com

படிப்பகம்

அரசிடமே அதிலும் மைய அரசிடமே குவிந்துள்ளதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். தனி நீதிமன்றங்களின் தலைமை நீதிபதி ஒரு வெறும் செஷன்ஸ் அளவிலான நீதி அதிகாரிதான் என்பதால் அரசு அவரை எளிதில் கையாள முடியும்.

இவ்வாறு நீதித்துறையின் அதிகாரமெல்லாம் பறிக்கப்பட்டு அரசதிகாரம் விரிவாக்கப்படுவது மிகப் பெரிய ஆபத்து என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். சனநாயகம் என்பது அடிப்படையான சனநாயக உரிமைகளைக் குடிமக்களுக்கு வழங்கி அதனைக் காக்கிற ஒரு நிறுவன ரீதியான அமைப்பு என்பதற்குப் பதிலாக வெறுமனே ஓட்டுப் போட்டு ஆளும் கட்சியைத் தேர்ந்தெடுப்பது மட்டும்தான் என்பதாக இன்று சுருக்கப்பட்டுவிட்டது. "மக்கள் நல அரசு' என்கிற கோட்பாட்டையும் இன்று அரசு வெளிப்படையாகவே உதறி வருகிறது. கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை உரிமைகளை மக்களுக்கு வழங்குதல், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல் என்பதிலிருந்தெல்லாம் அரசு தன் பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கும் ஒரு காலக்கட்டத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் நாம். சுதந்திர வணிகம், சந்தை, தனியார்மயம் என்கிற பெயர்களில் இந்திய முதலாளிகளும் சர்வதேச முதலாளிகளும் எவ்வளவு வேண்டுமானாலும் கொள்ளையடிக்க அனுமதித்துவிட்டு அதற்கு எதிராக எந்த வகையான எதிர்ப்புகளும் பிரச்சினைகளும் எழாமல் முளையிலேயே கிள்ளி எறியும் ஒரு அடக்குமுறை நிறுவனமாக மட்டுமே அரசு தன்னை இன்று சுருக்கிக்கொண்டுள்ளது. அதற்கேற்ற வகையில் ராணுவ ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் அரசு தன்னை வலுப்படுத்திக் கொள்கிறது. அதன் ஓரங்கமே 'தடா'. புதிய உலகச் சூழலில் சர்வதேச / உள்நாட்டு அளவிலான எஜமானர்களின் ஒரு விசுவாசமிக்க அடியாளாக அரசு மாறியுள்ளதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

எனவே, சனநாயகமான, வளமிக்க, சமத்துவம் நிறைந்த ஒரு எதிர்காலச் சமூகத்தைக் கனவு காணும் மனித உரிமையில் நாட்டமுடைய யாரும் ' தடா' வை எதிர்க்காமல் இருக்க முடியாது.

www.padippakam.com

# தடா: சில ஐயங்களும் தெளிவுகளும்

***இன்று இந்தியா முழுவதும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது. இனத்தின் அடிப்படையிலும் மதத்தின் அடிப்படையிலும் மக்களைப் பிளவுறுத்தும் போக்கும் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் 'தடா'போன்ற ஒரு சட்டம் அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவைதானே?***

இன்றைய இந்தியச் சூழல் பயங்கரவாதத்தாலும் பிளவுறுத்தும் போக்குகளாலும் நிரம்பியிருப்பது உண்மைதான். இத்தகைய சூழல் ஏன் ஏற்பட்டுள்ளது என்பதற்கான சமூக பொருளாதார/ கலாச்சார/ அரசியல் பின்னணிகளை நாம் விரிவாக ஆராய்ந்து பார்த்து இவற்றிற்கான மூல வேர்களைக் கண்டறிந்து களைவதற்கான நடைமுறைகளை மேற்கொள்வதன் மூலமாகத்தான் அமைதியை உருவாக்க முடியுமே தவிர 'தடா' போன்ற நடவடிக்கைகள் மக்களை அன்னியப்படுத்தவே வழிவகுக்கும். காசுமீர மக்கள் இன்று அன்னியப்பட்டு நிற்பதற்கு இத்தகைய நடைமுறைகள்தான் காரணம் என்பதை இன்று பலரும் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அடிப்படைச் சனநாயக உரிமைகளை மறுப்பதென்பதே பயங்கரவாதம் உருவாவதற்கும் பெருகுவதற்கும் ஒரு காரணமாக அமைந்துவிட முடியும். எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்க்கலாம். குற்றவாளிகள் எனச் சந்தேகப்படப்படுவோர் 'தடா'வில் கைது செய்யப்படும்போது பிணையில் வெளிவருவதற்கும் உரிமையின்றி, வழக்கும் விரைவாக முடிக்கப்படாமல் நீண்ட காலம் சிறையிலேயே வாட நேரும் அவலம் பற்றி நாம் அறிவோம். சட்ட பூர்வமான வழிகளில் 'தடா' கைதிகளை வெளியே கொண்டு வர இயலாதபோது தீவிர இயக்கங்கள் வேறு வழிகளைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. **ரூபீயா சயீத், துரைசாமி, கோஸ்லா, குப்தா** போன்றோரை காசுமீரத் தீவிரவாதிகள் கடத்தியபோதும் ஆந்திராவில் அரசு அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றோரை மக்கள் யுத்தக் குழுவினர் கடத்திய போதும் பிணைக் கைதிகளுக்கு ஈடாக இந்த இயக்கத்தினர் கேட்டதெல்லாம் நீண்ட காலமாக 'தடா'வில் சிறையிலடைக்கப் பட்ட தமது தோழர்களை விடுதலை செய்யச் சொல்லித்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே சாதாரண நீதிமன்ற உரிமைகளெல்லாம் பறிபோன ஒரு சூழலில் கடத்துதல் என்பது சிறையிலிருப்பவர்களை வெளிக்கொணரும் 'ஹேபியாஸ்



படிப்பகம்

கறுப்புச் சட்டமொன்றைப் பலரும் குறிப்பிடுவார்கள். இந்தச் சட்டமும் தடுப்புக் காவல் சட்டமாக இருந்தபோதிலும் இதில் 'தடா'வைப் போல இரகசிய விசாரணை இல்லை. குற்றத்தை அரசு தரப்புதான் நிறுவவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் பிணைக்கு மனு செய்ய இலவசச் சட்ட உதவி வழங்கப்படும். அரசு வழக்குரைஞர் என்பவர் ஒரு முழுமையான அரசு ஊழியரல்ல; சுதந்திரமான பொது விசாரணை இயக்குநர் ஒருவரே அரசு தரப்பில் வழக்கை நடத்துவார். போலீஸ் மற்றும் ராணுவத்திற்கெதிரான புகார்களை விசாரிக்கச் சட்டப்பூர்வமான தனி அமைப்புகள் உண்டு. இதெல்லாம் அயர்லாந்தில். இந்த உரிமைகள் எதுவும் 'தடா' சட்டத்தில் கிடையாது என்பதை அறிவீர்கள்.

வெள்ளைக்காரன் காலத்துக் கொடிய கறுப்புச் சட்டம் ரவுலத் சட்டம். இந்தச் சட்டத்தின் நான்காவது பிரிவின்படி தனி நீதிமன்றம் அமைக்க வேண்டுமானால் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் மாகாண அரசு அனுமதி பெற வேண்டும். இத்தகைய அனுமதி எதுவும் தடாவுக்குத் தேவையில்லை. ரவுலத் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவரை விசாரிக்க மூன்று உயர்நீதி மன்ற நீதிபதிகளை தலைமை நீதிபதி நியமிக்க வேண்டும். தடாவில் ஓய்வு பெற்ற ஒரு செஷன்ஸ் நீதிபதியே போதுமானது. ரவுலத் சட்டத்தில் முதலில் அரசு வழக்குரைஞர், தான் எந்தச் சட்டத்தின் அடிப்படையில் குற்றத்தை நிறுவப் போகிறார் என்பதைச் சுருக்கமாக விளக்கியாக வேண்டும். ரவுலத் சட்டத்தில் மூன்று நீதிபதிகளும் கருத்தொருமிக்கும்போதுதான் மரண தண்டனை வழங்க முடியும். அப்படித் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு மேல் முறையீடு கிடையாது. இதற்காக ரவுலத் சட்டம் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. 'தடா' சட்டத்தில் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டாலும் அதை உச்சநீதி மன்றத்தில்தான் செய்ய வேண்டும். நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் குறிப்பிட்டதுபோலச் சாதாரண மக்களுக்கு இது சாத்தியமில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பிணை தொடர்பான விதி முறைகளை உருவாக்கிக்கொள்ள ரவுலத் சட்டம் தலைமை நீதிபதிக்கு உரிமையளித்தது. ரவுலத் சட்டத்தின்படி ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்க வேண்டுமானால் நீதித்துறை நடுவர் ஒருவரிடம் ஆணை பெற வேண்டும். 'தடா'வில் வருவாய்த்துறை அதிகாரி ஒருவரே இந்த ஆணையை வழங்க முடியும்.

கடைசியாக, இன்றும் அமலில் உள்ள தேசிய பாதுகாப்புச் சட்டத்(1980)துடன் ஒப்பிட்டாலும் 'தடா' மோசமானதுதான். என்.எஸ்.ஏ.வில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு ஐந்து நாட்களுக்குள் அல்லது தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் பத்து நாட்களுக்குள் காரணம் சொல்லப்பட வேண்டும். மூன்று வாரங்களுக்குள்

இது தொடர்பான ஆலோசனைக் குழு (Advisory Board) ஒன்றிடம் வழக்கு தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். என்.எஸ்.ஏ.வின் கீழ் அதிகப் பட்சம் ஓராண்டுக் காலம்தான் ஒருவரைச் சிறையில் வைக்க முடியும். இத்தகைய உரிமைகள் கூடத் 'தடா' கைதிகளுக்கு இல்லை.

எனவே எந்த வகையில் பார்த்தாலும் தடாவைக் காட்டிலும் கொடூரமான ஆள் தூக்கிக் கறுப்புச் சட்டம் கிடையாது.

# தடா: இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**எஸ்.பி. சவான்,** ***மத்திய உள்துறை அமைச்சர்***

"எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தும், எத்தனையோ கடிதங்கள் எழுதியும் 'தடா' தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுக்க முடியவில்லை... என்னால் இதை மறுக்க முடியாது"

*-பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் பேசும்போது குறிப்பிட்டது - ஆக. 19, 1994.*

**ராஜேஷ் பைலட்,** ***மத்திய துணை அமைச்சர்***

"இசுலாமியர்களுக்கு எதிராகத் 'தடா' பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது... இப்படித் தவறாகப் பயன்படுத்துவதன் விளைவாகவே 95 சதத் தடா வழக்குகள் நீதி மன்றங்களில் தோற்றுவிடுகின்றன. 'தடா' பயன்படுத்தப்படுவது எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. சில மாநில அரசுகள் இதைத் தவறாகப் பயன்படுத்துகின்றன. பஞ்சாப் தீவிரவாதத்தை எதிர்கொள்வதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டது. இப்போது இதனை மறுபரிசிலனை செய்வதற்கான நேரம் வந்துவிட்டது.

*-அகில இந்திய கிலாபத் குழு பேரணியில் பேசியது-ஆக 21, 94*
*- மற்றும் ஃப்ரண்ட் லைன் பேட்டி- செப் 23, 94*

**சி.கே. ஜாஃபர் ஷெரீப்,** ***மத்திய ரயில்வே அமைச்சர்***

'தடா' தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. பயங்கரவாதிகளுக்காகப் போடப்பட்ட இச்சட்டத்தைக் காவல்துறையினர் அப்பாவி மக்களை அச்சுறுவதற்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஏராளமானோர் என்னைச் சந்தித்துத் தமக்கு மிகவும் நெருக்கமானவர்கள் எந்தக் காரணமும் இல்லாமல் தடாவில் கைது செய்யப்பட்டது பற்றிய வேதனைக் கதைகளைச் சொல்கிறார்கள். 'தடா'வில் கைது செய்யப்பட்டிருப்பவர்களின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து பார்த்தால் ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவினர் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதை அறியலாம். பஞ்சாப், அஸ்ஸாம், ஜம்மு-காஷ்மீர் போன்ற பகுதிகளில் நிலவும் அசாதாரணமான சூழலை எதிர்கொள்வதற்காகத்தான் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இன்று இது மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் பெரிய அளவில் பயன்படுத்தப்படுவது கண்டு வேதனைப்படுகின்றேன். 'தடா'வைத் தவறாகப் பயன்படுத்துவது கடுமையான மனித உரிமை மீறலாகும். நாகரீகமான சனநாயகச் சமூகம்

ஒன்றில் இதனை நியாயப்படுத்த முடியாது.

*-ப்ரண்ட் லைன், செப். 23, 94.*

**ரங்கனாத் மிஸ்ரா, *தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர்***

"65,000 பேருக்கு மேல் கைது செய்யப் பயன்படுத்தப் பட்டுள்ள 'தடா' சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டு மென உறுதியாகக் கருதுகின்றேன். பயங்கரவாதத்திற்குத் தொடர்பே இல்லாத பல மாநிலங்களில் இச்சட்டம் பயன் படுத்தப்படுவது தொடர்கிறது. மனித உரிமை தொடர்பான சில சர்வதேச நகல் உடன்பாடுகளில் நாம் கையெழுத்திட்டுள்ளோம். விசாரணைக் கைதிகளை நடத்துகிற விசயத்திலும், மனித உரிமைப் பிரச்சினைகளிலும் இந்த உடன்பாடுகள் சில நெறிமுறைகளை வகுத்துள்ளன. நிச்சயமாக 'தடா' இந்நெறிமுறைகளோடு பொருந்தி வரவில்லை"

*ப்ரண்ட்லைன், செப் 23,94.*

'தடா'வை எதிர்த்து தேசிய மனித உரிமை ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுள்ளது. இன்னும் இரண்டு மாதங்களில் தடா சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும் என்று மிஸ்ரா குறிப்பிட்டுள்ளார்.

*(இந்தியன்எக்ஸ்பிரஸ் அக்.2, 94)*

**சிறுபான்மையோர் ஆணையம் *(அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்டது)***

"சிறுபான்மையினருக்கு எதிரான ஆயுதமாகத் 'தடா' அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது... குடிமக்களுக்கு எதிராக பாரபட்சமாகவும், நியாயமில்லாமலும் பயன்படுத்த வாய்ப்பளிக்கும் இச்சட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்"

*-ஜுன் 6, 1994-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

**ரோஸலின் இக்கின்ஸ், *ஐ.நா. மனித உரிமை ஆணைய உறுப்பினர்***

தடா சட்டத்தின் சில பிரிவுகள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச நகல் உடன்பாட்டிற்கு எதிராக உள்ளன. விசாரணை வெளிப்படையாக நடத்தப்பட வேண்டு மென்கிறது நகல் உடன்பாடு. ஆனால் உங்கள் 'தடா'வோ இரகசிய விசாரணைக்கு வழிவகுக்கிறது. தனி நீதிமன்றங்கள் மரண தண்டனை கூட வழங்க முடியும் என்கிறபோது மேற்குறித்த இரகசிய விசாரணைப் பிரிவு எவ்வாறு நகல் உடன்பாட்டின் 14-வது பிரிவுடன் பொருந்தி வரும் என்று கேட்கிறேன்".

*-மார்ச் 27, 1994.*

***சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம்***

"தடா'வின் நடைமுறைப் பிரிவுகள் அநீதியானவை; தர்க்க

நியாயங்களுக்கு விரோதமானவை. இது ஏதோ குற்றவாளிகளுக்கு எதிரான சட்டம் மட்டுமல்ல; ஒட்டு மொத்தமாகச் சமூகத்திற்கே அநீதியான சட்டம். 'தடா'வின் மூலம் அப்பாவிகளையும்கூட அநியாயமாகக் கைது செய்ய முடியும். நீண்ட காலம் போலீஸ் காவலிலும் நீதித்துறைக் காவலிலும் வைக்க முடியும்; தண்டித்துவிட முடியும். 'தடா'வின் மூலமான இத்தகைய அநீதி என்பது கைது செய்யப்பட்டவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இது தீவிரவாதம் வளர்வதற்குக் காரணமாகிறது. தடாவின் மூலம் போலீசுக்குக் கிடைக்கும் எதேச்சாதிகாரமான அதிகாரங்கள் அரசு பயங்கரவாதத்தைக் கட்டமைக்கிறது எனச் சொல்வது பொருத்தமே. இது பயங்கரவாதத் தீ வளர்வதற்குக் காரணமாகும். மேலும் போலீசின் அதிகாரங்கள் இவ்வாறு அதிகரிப்பதென்பது நிலவுகிற லஞ்ச ஊழலை அதிகரிப்பதிலேயே முடியும். அரசியல் சட்டத்தின் 21-வது பிரிவிற்கு எதிராக உள்ள இந்த அநீதியான சட்டப் பிரிவுகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்"

(பொது மன்னிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்ட வாசகங்கள்.)

*-மெய்ன்ஸ்ட்ரீம், செப். 3, 1994.*

**நீதிபதி சுரேஷ் ஒஸ்பெட்**

ஆந்திரா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா அல்லது வடகிழக்கிலுள்ள மலையின மக்கள் ஆயுதங்கள் வைத்திருப்ப தென்பது அவர்களின் இயல்பான பண்புகளில் ஒன்று. அவர்கள் மீது 'தடா' பயன்படுத்தப்படுவதற்கு இது காரணமாகிவிட முடியாது. சாதாரணமான ஆயுதச் சட்டத்தின் மூலமாகவே இதனை எதிர்கொள்ள முடியும். சர்தார் ஆரோவர் திட்டத்திற்கு எதிராகப் போராடுகிற கிராமவாசிகளுக்கு எதிராகவும் கூடத் தடா பாய்ந்துள்ளது. அவர்களை எதிர்கொள்ள இதுவா வழி? நீண்ட நாட்களாக அந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துவதுதான் சரியான வழிமுறையாக இருக்குமேயொழிய மோதி அழிப்பது அல்ல".

*-மெய்ன்ஸ்ட்ரீம், செப். 3, 1994.*

**ரத்தினவேல் பாண்டியன், உச்சநீதி மன்ற நீதிபதி**

"குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் வருவதைத் தடுக்கிற வக்கிர நோக்கத்திற்காகவும், வேறு சில வழக்குகளில் சாதாரணப் பிரிவுகளின் கீழ்க் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் பிணை அளிக்க முன் வரும்போது அதைத் தடுத்து நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் போலீஸ் அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் ரொம்பவும் அநியாய

மாகத் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்துவது உண்மைதான். தேவையே இல்லாத சந்தர்ப்பங்களில் இவ்வாறு 'தடா'வைப் பயன்படுத்துவதென்பது சட்டத்தைக் காவல்துறை அப்பட்டமாகத் தவறாகப் பயன்படுத்துவதுதான்".

*-உச்ச நீதி மன்றத் தீர்ப்பு, மார்ச் 11, 1994.*

**குல்தீப் நய்யார், *பத்திரிகையாளர்***

"ஒரு குறிப்பிட்ட சட்டம் சரியா, தவறா என்பதல்ல பிரச்சினை. மக்களின் சுதந்திரத்தைத் தடுப்பதற்காக ஏராளமான சட்டங்களை அரசு கைவசம் வைத்துள்ளது. ஒரு சனநாயக அமைப்பில் சனங்கள் அனுபவித்து வருகிற சுதந்திர உரிமைகள் குறைக்கப்படுவதை எந்த அளவிற்கு அனுமதிக்கப் போகிறோம் என்பதுதான் பிரச்சினையே... அரசியல் சட்ட உருவாக்கத்தின் போது காவலில் எவ்வளவு நாட்கள் வைத்திருக்கலாம் என்கிற விவாதம் வந்தபோது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் 15 நாளா, ஏழு நாளா என்கிற விவாதத்தைத் தூக்கி எறிந்து "காவலில் வைத்திருக்கும் காலம் 24 மணி நேரத்தைத் தாண்டக்கூடாது" என்றார். இன்று 'தடா'வில் ரிமாண்ட் காலம் ஆறு மாதம் என்பது அம்பேத்கர் கருத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் எத்தனை சோகமானது! சட்டப் புத்தகத்தில் தடா இருக்கும்வரை சாதாரண சட்டங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அதைப் பயன்படுத்துவதிலிருந்து அரசைத் தடுக்க முடியாது".

*-மெய்ன்ஸ்ட்ரீம், ஆக. 20, 1994.*

**ஏ.ஜி. நூரானி, *மனித உரிமைச் சிந்தனையாளர்***

'தடா' பாராளுமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு ஏமாற்று நடவடிக்கை. 'தடா'வின் மோசமான அம்சங்களை மட்டும் தனியே பார்த்துவிட்டு அதன் மொத்தத்துவத்தைப் பாராமல் இருந்துவிடக்கூடாது. புகழ் பெற்ற மனித உரிமைப் போராளியும் வழக்குரைஞருமான ஏர்லி நார்ட்டன் அவர்கள் வேறோர் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டதுபோல் தடா என்பதன் மூலம், "குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்பூர்வமான பாதுகாப்புகள் அனைத்தையும் ஒழித்துக் கட்டிவிடும் அதிகாரத்தைச் சட்டத்தின் மூலம் பெற்றுக் கொண்டுள்ள அரசின் கரங்களில் குற்றவாளியின் விதியை நிர்ணயிக்கும் அதிகாரம் விடப்படுவது என்பது மிகப் பெரிய கொடுமை".

*-ப்ரண்ட்லைன், செப். 23, 1994.*

www.padippakam.com

# தடா: சில சோகக் கதைகள்

***பரேஷ் கலிதா***

3-11-91ல் கைதான இச்சிறுவனின் வயது 12. அஸ்ஸாம் மாநிலத்தில் உதல்குரி பகுதியைச் சேர்ந்தவன். இவன்மீது இ.பி.கோ. 120 பி சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 5.3, இந்திய ஆயுதசட்டம் 2. 25 (1ஏ) தடா 5.3,4,5 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குகள் போடப்பட்டன.

***வரவரராவ்***

தெலுங்குக் கவிஞரும், பேராசிரியருமான வரவரராவ் அவர்கள் ராம்நகர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டது நாம் அறிந்ததுதான். இந்த வழக்கில் அவர் 14-வது குற்றவாளி (A-14). சாட்சியத்தின் ஒரு பகுதி A-14-ன் கையெழுத்திலேயே இருப்பதாகக் குறிப்பிட்ட காவல்துறை - எனவே வரவரராவ் குற்றவாளி என வாதிட்டது. சான்றாக அச்சாட்சியத்தின் செராக்ஸ் பிரதி ஒன்று நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டது. குற்றப்பத்திரிகையில் A-4ன் எழுத்து வடிவிலான சாட்சியமாக குறிப்பிடப்பட்ட அது இப்போது A-14 ஆகத் திருத்தப்பட்டு செராக்ஸ் எடுக்கப்பட்டது. பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்டது. இரகசிய விசாரணையில் அரசு தரப்பில் எத்தகைய தில்லு முல்லுகள் வேண்டுமானாலும் செய்யப்படலாம் என்பதற்கு இது ஒரு சான்று.

***சுகா – ஜிண்டா***

பொற்கோவில் தாக்கப்பட்டபோது ராணுவத் தலைவராக இருந்த ஜெனரல் வைத்யாவைச் சுட்டுக்கொன்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள். குற்றத்தை இருவரும் ஒப்புக் கொண்டனர். இ.பி.கோ. 120B, 302, 307 மற்றும் தடா (S.3,4) பிரிவுகளின்கீழ் வழக்குப் போடப்பட்டது. தடா வழக்கு என்பதால் கொலை வழக்கும் சேர்ந்து தனி நீதி மன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. வழக்கில் தடா குற்றங்கள் நிருபணமாகவில்லை. அதாவது பயங்கரவாதி என நிருபிக்கப் படவில்லை. எனினும் தடா வழக்கு என்பதால் இ.பி.கோ. பிரிவுகளின் கீழான வழக்கும் தொடர்ந்து தனி நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டு இறுதியில் அவர்கள் தூக்கிலிடவும்பட்டனர். தடா வழக்கு சேர்க்கப் பட்டதால் கொலைக்குற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யும் உரிமை சுகா-ஜிண்டாவுக்கு மறுக்கப்பட்டது கவனிக்கத்தக்கது. (அவர்கள் மேல்முறையீட்டில்



படிப்பகம்

**அஜீத் சிங் பெய்ன்ஸ்**

ஓய்வு பெற்ற நீதிபதி, பஞ்சாப் மனித உரிமை அமைப்பின் தலைவர், அகாலி தள் (மான்) கட்சி சார்பாகத் தேர்தலில் நின்று தோற்றவர். 1992 ஏப்ரல் 3ம் தேதி காலை விளையாட்டுத் திடலிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டார். சித்திரவதை செய்யப்பட்டார். மற்ற வழக்குகளோடு தடா வழக்கும் சேர்க்கப்பட்டது. மார்ச் 18-ஆம் தேதி அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் காலிஸ்தான் பிரிவினைக் கருத்துக்கள் பேசப்பட்டது என்பதும் அக்கூட்டத்தில் பெய்ன்சும் கலந்துகொண்டார் என்பதும் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள். வேறு எந்தப் பயங்கரவாத நடவடிக்கையோடும் அவர் இணைக்கப்படவில்லை. கைதான போது அவர் வயது எழுபது.

**போங்னோவா கப்பல் வழக்கு**

1991 நவம்பர் 1 அன்று சிங்கப்பூரிலிருந்து தமிழ் ஈழ மக்களின் தேவைக்காக உணவுப் பொருட்கள், மருந்து, பெட்ரோல் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு கப்பலொன்று சர்வதேசக் கடல் எல்லையில் - சென்னையிலிருந்து 383 கடல் மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்தபோது, இந்தியப் படை தாக்கிக் கைப்பற்றியது அனைவரும் அறிந்த ஒன்று. இந்தக் கப்பலின் **கேப்டன் பாலன்**, உதவியாளர் **ராஜ்குமார்** மற்றும் இக்கப்பலில் ஊதியத்திற்காக வேலை செய்த **சின்னத்தம்பி, விவேகானந்தன், சாந்தகுமார், முரளீதரன், விக்கினராஜா, மகேந்திர சிகாமணி** ஆகியோர் கைது செய்யப்பட்டுப் பல்வேறு சித்திரவதைகளுக்குப் பின் தடா வழக்கில் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். தற்போது மூன்று ஆண்டுகளாகியும் விசாரணையின்றிச் சிறையில் உள்ளனர். இவர்களில் ஒருவரான **சிவத்தம்பியை** இவ்வழக்கில் கைதான நான்கு மாதங்களுக்குப் பிறகு பட்டினங்காத்தான் துப்பாக்கிச் சூட்டு வழக்கில் தொடர்புப்படுத்தி மேலும் ஒரு தடா வழக்கைச் சேர்த்தனர். ஆக இவர் மீது இரண்டு தடா. இவர் நிரபராதி என அண்மையில் நீதிமன்றம் இவரை விடுதலை செய்தது. 1991 பிப்ரவரி 4-ல் கைது செய்யப்பட்டுத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலிருந்த ஈழத்தமிழர் **ஈசன்** என்பவரையும் 8-11-91ல் பிடிபட்ட மேற்படி **போஸ்னோவா** கப்பல் வழக்கில் சேர்த்துத் தடா வழக்கில் இணைத்துள்ளனர். இதேபோல 6.2.91-ல் கைது செய்யப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறையிலிருந்த **சுகிர்தகுமார்** என்பவரையும் ஒன்பது மாதங்களுக்குப் பின் பிடிபட்ட **போங்னோவா** கப்பல் வழக்கில் சேர்த்துத் தடா வழக்கையும் சேர்த்துள்ளனர். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவருடன் கைது செய்யப்பட்ட இவரது மனைவி கலைவாணி, இரு மைத்துனிகள் கலைமதி,

அமுதா மற்றும் ஒன்றரை வயதுக் குழந்தை ஆகியோர் மீது தடா வழக்கில்லாததால் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**இரண்டு தடா வழக்குகள்**

**கோபாலகிருஷ்ணன், ராஜரத்தினம், அருணாசலம்** ஆகியோர் 1991 ஆகஸ்டு 3, 4, 7 ஆகிய தேதிகளில் திருச்சி போலீசால் கைது செய்யப்பட்டுத் தடா வழக்கில் சிறையிடப்பட்டனர். பின்னர் சிறையிலிருந்தபோதே இவர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டமும், (21.10.91ல்) ஏவப்பட்டது. விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்ததாக இவர்கள் மீது குற்றச்சாட்டு. ஓராண்டுச் சிறைக்குப் பின்பு சொந்தப் பிணையில் (5.8.92) விடுதலை செய்யப்பட்டனர். எனினும் இவர்களை முறையே 1993 ஜூலை 7, ஜூன் 28, ஜூலை 2 ஆகிய தேதிகளில் கைது செய்து இரண்டாம் தடவையாக தடா வழக்குப் போடப்பட்டுள்ளது. பிப்ரவரி 94-ல் ரூ. 50,000 மதிப்புள்ள இரு நபர் பிணை இவர்களுக்கு வழங்கப்பட்டது. சாத்தியமில்லாததால் விடுதலை உத்தரவு கிடைத்தும் கடந்த பத்து மாத காலமாக இவர்கள் சிறையிலேயே உள்ளனர்.

**பா.ம.க. மற்றும் தி.க.வினர் மீதும் தடா**

பாட்டாளி மக்கள் கட்சியின் வட ஆர்க்காடு மாவட்ட மாணவரணிச் செயலர் **கோ. சதாசிவம்** வேலூர் வட்டார பா.ம.க. தலைவரின் மகன் **து. ரமேஷ்,** பா.ம.க. ஆதரவாளர் **பாஸ்கர்** பஸ் எரிக்கப்பட்ட வழக்கொன்றில் இ.பி.கோ.பிரிவொன்றின் கீழ்க் கைது செய்யப்பட்ட (ஏப்ரல் 94) இவர்கள் மீது பத்து நாட்களுக்குப் பிறகு (21.04.94) தடா பிரிவும் சேர்க்கப்பட்டது.

**முற்போக்கு இளைஞர் அணியினர் மீது தடா**

காவல்துறை அத்துமீறல்களை எதிர்த்து முற்போக்கு இளைஞர் அணியின் சார்பாக **பரமக்குடி** பகுதியில் பொதுக்கூட்டம், ஊர்வலம் முதலியவற்றை நடத்தியவர் **கண்ணுசாமி.** நவம்பர் 91ல் கைதுசெய்யப்பட்ட இவர், கடும் சித்திரவதைகளுக்குப் பிறகு தடாவில் சிறையிடப்பட்டார். மின்வாரிய ஊழியராகிய **மு. வேலு** முற்போக்கு இளைஞரணியின் ஆதரவாளர். நவம்பர் 92ல் கைது செய்யப்பட்ட இவரையும் **மு.சிசுபாலன்** என்கிற திராவிடர் கழக உறுப்பினரையும் தருமபுரி அருகே ரயில்வே பாலத்தைத் தகர்க்க முயன்றதாகக் குற்றம் சாட்டி தடாவில் சிறையிட்டுள்ளனர். பிணை கிடைக்காமல் இருவரும் இரண்டாண்டுகளாகச் சிறையிலுள்ளனர்.

**தமிழ்த் தேசிய மீட்புப் படையினர்**

தமிழ்த் தேசிய மீட்புப் படை என்கிற தீவிரவாத அமைப்பைச்

தமிழ்த் தேசிய மீட்புப் படை என்கிற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் குற்றம் சாட்டி 30 பேர் திண்டுக்கல் போலீசால் கடந்த நவம்பர் 91-ல் கைது செய்யப்பட்டதை அறிவோம். இவர்கள் அனைவர் மீதும் தடா வழக்குகள் போடப்பட்டுள்ளன. இவர்களில் இருவர் ராஜீவ் கொலைவழக்கில் தொடர்புடையவர்கள் எனப் பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் மற்ற வழக்குகள் நடத்தப்படவில்லை. பிணையும் வழங்கப்படவில்லை. இவ்வாறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ஒரு சிலரைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமன்றம் அழைத்து வர இயலாதபோது மற்றவர்களைப் பிணையில் விடுதலை செய்யலாம் என உச்ச நீதிமன்றத் தீர்ப்பொன்று உள்ளது. இந்தத் தீர்ப்பின்படி வேறு சில வழக்குகளில் உள்ளவர்களுக்குப் பிணை விடுதலை அளித்தாலும் அடுத்த ஒன்பது மாதக் காலம் வரை தமிழ்த் தேசிய மீட்புப் படை வழக்கில் தொடர்புடையோருக்கு மட்டும் பிணை விடுதலை அளிக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

### மகேந்திர ராஜா

முறையாக அகதி எனப் பதிவு செய்திருந்த ஈழத்தமிழராகிய இவர் பத்மநாபா கொலை வழக்கிலுள்ள ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நவம்பர் 91-ல் சிறையிலடைக்கப்பட்டார். தன்மீது என்ன குற்றம் சாட்டப் பட்டுள்ளது என்பதையே அவர் நீதிமன்றம் மூலமாகத்தான் அறிய முடிந்தது. இரு நபர் பிணையில் மூன்றாண்டுகளுக்குப் பின்பு விடுதலை செய்யப்பட்ட இவரை (9.8.94) சிறை வாசலிலேயே Q பிரிவு போலீசார் கைது செய்து செங்கல்பட்டு ச்ப் ஜெயிலில் உள்ள சிறப்பு முகாமில் அடைத்தனர். அங்கு 24 மணி நேரமும் பூட்டியே வைக்கப்பட்டிருந்தார். சிறைக்குள் பிற இயக்கத்தவரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். இவற்றின் வாயிலாகத் தமது பிணையலை ரத்து செய்து அவர் சென்ற அக்டோபர் 28-ல் சென்னை மத்திய சிறைக்கே திரும்பினார்.

### பேராசிரியர் நெடுஞ்செழியன்

மன்னார்குடியில் சென்ற ஆகஸ்டு எட்டாம் தேதியன்று கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு **ராசேந்திரன்** என்பவர் செத்துப்போனதை அறிவோம். இந்த வழக்கில் தொடர்புப்படுத்தி ஈ.வெரா. பெரியார் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் க. **நெடுஞ்செழியன்,** தஞ்சை வள்ளலார் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் **குருசாமி** பாப்பாநாடு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் **காமராசு** ஆகியோரைச் சென்ற செப்டம்பர் மாதத்தில் தடா வழக்கில் சிறையில் அடைத்துள்ளனர். சென்ற சனவரி 94-ல் ஒரத்தநாடு காவல் நிலையத்தில் **ரெங்கம்மாள்** என்பவர் கற்பழிக்கப்

பட்டதையும் அதையடுத்து அவர் கணவர் தற்கொலை செய்துகொண்டதையும் வெளிக்கொணர்ந்து நீதிபெறும் முயற்சியில் நடைபெற்ற சட்டப்பூர்வமான போராட்டங்களில் முன்னணியில் இருந்து பங்கு பெற்றவர் காமராசு. மன்னார்குடி வழக்கில் தொடர்புப்படுத்தி இவர் கைது செய்யப்பட்டவுடன் கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார். "போய் அந்த ரங்கநாத் மிஸ்ராவிடம் சொல்லு. அவன் வந்து உன்னைக் காப்பாற்றுவான்" என்று சொல்லி அடித்துள்ளனர். வெற்றுத் தாள்களில் கையெழுத்து வாங்கியுள்ளனர். தொடர்ந்து **பேராசிரியர் நெடுஞ்செழியனும் குருசாமியும்** கைது செய்யப் பட்டனர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரும் சுமார் முப்பதாண்டுகளாக அரசு கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவருமான **டாக்டர் நெடுஞ்செழியன்** சிறந்த கல்வியாளர். தமிழறிஞர். 'தமிழர் பாசறை' என்கிற அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு **நெடுஞ்செழியன்** வீட்டில் தமிழ்நாட்டுப் பிரிவினை குறித்த வகுப்பு நடத்தப்பட்டதாக **நெடுஞ்செழியன், குருசாமி** ஆகியோர் மீது குற்றச்சாட்டு. எந்தவிதமான ஆதாரமுமில்லாமல் இவ்வழக்கு தடா சட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ளது.

**ஜோஎன். போரா**

தடா சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குச் சுமார் 17 ஆண்டுகள் முன்னதாகப் பூத்பார் என்னும் அஸ்ஸாம் மொழிப் பத்திரிகையில் பிரிவினை கோரி கட்டுரை ஒன்றை எழுதியதற்காக அஸ்ஸாம் சாகித்ய சங்கத் தலைவர் **போரா** அவர்களையும் பத்திரிகை ஆசிரியர் **பராக்தாஸ்** அவர்க்ளையும் தடாவில் மாட்டியது அஸ்ஸாம் அரசு. ஆனால் இந்த வழக்கில் மட்டும் அரசுக்குப் பெரிய தோல்விதான். **போராவைத்** தடா வழக்கில் போட்டாலும், அவரைக் கைது செய்ய முடியவில்லை. ஏனெனில்அவர் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே இறந்திருந்தார்.

**இசுலாமியர் மீது தடா**

அகில இந்திய அளவில் தடாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது இசுலாமியர்கள்தான் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். கைதானவர்களில் எண்பது சதம் பேர் இசுலாமியர்கள்தான் என பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். தேச நலனை முன்னிட்டுக் கைதானவர்களில் மதவாரியான எண்ணிக்கையைச் சொல்ல முடியாது என்கிறார் அமைச்சர் சவான். தமிழகத்திலும் கூட இதுவரை ஈழத்தமிழர்கள், நக்சல்பாரி இயக்கத்தினர், பா.ம.க. உள்ளிட்ட தமிழ்த் தேசிய ஆதரவு சக்திகள் மீது பாய்ந்து கொண்டிருந்த தடா சட்டம் சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வீசித் தகர்க்கப்பட்ட பின்பு (நவம்பர் 93) இசுலாமியர் மீது பாயத் தொடங்கியுள்ளது. குண்டு வைத்தவர்களைத்

www.padippakam.com

தேடுகிறேன் என்ற பெயரில் வடஆர்க்காடு **வாணியம்பாடி, கோவை, கோட்டைமேடு** போன்ற பகுதிகளில் கடும் போலீஸ் தாக்குதல் நடைபெற்றது. சென்ற 1993 நவம்பர் 16ஆம்தேதி அன்று ஆயிரக்கணக்கில் போலீசைக் கொண்டு குவித்து கோட்டைமேடு பகுதியைச் சேர்ந்த **பாட்சாவைக்** கைது செய்து தடா வழக்குப் போட்டு சென்னைச் சிறையில் அடைத்துள்ளனர். இவர் மீது வேறு பல வழக்குகள் ஏற்கனவே உள்ளன. **பாட்சாவுடன்** தொடர்புடையவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு பல அப்பாவி இளைஞர்கள் தடாவில் சிறையிடப்பட்டனர். இவர்களில் பலர் 25 வயதுக்கும் குறைவான இளைஞர்கள். எடுத்துக்காட்டாக கோட்டைமேடு **யூசுப்பின்** மகன் **அப்துல் ஓஸீர்** 24 வயது இளைஞர். அப்துல் ரகுமானின் மகன் **நவாப் கானின்** வயது 22. **ஏ.எம். பாட்சாவின்** மகன் **முஜிபுர் ரஹ்மானின்** வயது 23. "பாகிஸ்தானுக்கு ஓடுங்கடா" எனச் சொல்லி இவர்கள் அனைவரும் கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டனர். இப்போது மதுரை இந்து முன்னணித் தலைவரது கொலைவழக்கிலும் கைது செய்யப்பட்ட **சீனி நயினார் முகம்மது** முதலிய இசலாமியர் தடா வழக்கில் சிறையிலடைக்கப் பட்டுள்ளனர். ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வழக்கிலும் சரி, இதிலும் சரி முதன்மையான குற்றவாளிகள் கைதுசெய்யப் படாதபோதே இவை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் தடா வழக்கிற்குட்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மதுரை கொலை வழக்கைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில் இசுலாமியர்களைக் கொன்றவர்கள் மீது சாதாரண இ.பி.கோ. பிரிவின் கீழ்தான் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆனால் **சீனி நயினார் முகம்மது** மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் மீது தடா என்பது இச்சட்டப் பிரயோகத்தின் மதச் சார்புத் தன்மைக்கு ஒரு வெளிப்படையான சான்று.


படிப்பகம்

# தடா: என்ன செய்யப் போகின்றோம்?

கொஞ்சக் காலத்திற்கு மட்டும் எனவும் ஒரு சில மாநிலங்களில் மட்டும்தான் பிரயோகிக்கப்படும் எனவும் வாக்குறுதிகளுடன் புகுத்தப்பட்ட தடா சட்டம், இன்று ஒன்பதாண்டுக் காலமாகியும் விலக்கப்படவில்லை. கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் பிரயோகிக்கப்படுகிறது. மனித உரிமைப் போராளிகள் தொடர்ச்சியாக தடா சட்டத்தை எதிர்த்து வந்த போதும், முக்கிய அரசியல் கட்சிகள் எதுவும் வன்மையாக தடாவை எதிர்க்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. எதிர்க்கட்சிகள் அவ்வப்போது தடாவை எதிர்த்துப் பேசி வந்தபோதும், அவை எல்லாம் ஒப்புக்குச் சொல்லப் பட்டவையாக இருந்ததேயொழிய தடாவை எதிர்த்து பெரிய இயக்கங்கள் எதையும் அவர்கள் நடத்திவிடவில்லை. தடாவை எதிர்த்தவர்களே அதிகாரம் கிடைத்தபோது அதனைப் பிரயோகிக்கவும் செய்தனர். இதனைக் கொஞ்சம் விளக்கமாகப் பார்த்தல் தகும்.

இந்திய அரசு பாதுகாப்புச் சட்டம் (DIR) 1926ல் இந்திய-சீன எல்லைத் தகராறை ஒட்டிப் புகுத்தப்பட்டபோது ஒன்றாய் இருந்த பொதுவுடைமைக் கட்சி, சோஷலிசக் கட்சி உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரித்தன. பின்னர் பம்பாயில் நகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை நடத்த முற்பட்டபோது சோசலிசக் கட்சித் தலைவர்கள் **மதுலிமாயி, தாதா நாயக்** ஆகியோர் அச்சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டனர். 1964 இறுதியில் ஆயிரக்கணக்கான மார்க்சிஸ்ட் கட்சி ஊழியர்கள் மீது அச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது. 1971-ல் மிசா சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அதனையும் கிட்டத்தட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் ஆதரித்தன. பின்னர் நெருக்கடி நிலை காலத்தில் (1975-77) பல்லாயிரக்கணக்கான எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் மீது அச்சட்டம் பிரயோகிக்கப்பட்டதை நாம் அறிவோம். எண்பதுகளில் எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தில் இத்தகைய சட்டங்களைக் கொண்டுவரும்போது அதனை எதிர்ப்பதும், கொண்டுவந்த பின்பு அவற்றைப் பயன்படுத்தும் போது எதிர்ப்புக் காட்டாததுமாக அவர்கள் நிலை தொடர்ந்தது. 1980-ல் தேசியப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தபோதும் பின்னர் 1984-லும் 87-லும் அதில் திருத்தங்கள் செய்தபோதும் எதிர்க்கட்சியினர்

இப்படித்தான் நடந்து கொண்டனர் 1985-ல் தடா கொண்டு வரப்பட்டபோது சில ஐயங்களை எழுப்பினரேயன்றி எல்லாக் கட்சிகளின் ஆதரவுடனேயே சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 1987லும் 89லும் தடா நீட்டிக்கப்பட்டபோது எதிர்க்கட்சிகளில் பல அதனை எதிர்த்தன. என்றாலும் பின்னர் அவர்களே அதனைப் பயன்படுத்தவும் செய்தனர்.

'தடா' கொண்டுவரப்பட்டபோது மைய அமைச்சரவையில் உள்ள இரண்டாம் இடத்திலிருந்தவர் வி.**பி. சிங்.** சட்டத்தை முன்மொழிந்தவர் அன்றைய சட்ட அமைச்சர் **அசோக்சென்.** அத்தியாவசியப் பணிகள் காப்புச் சட்டத்தையும் பயங்கரவாதப் பகுதிகள் சட்டத்தையும் முன்மொழிந்தவர் **ஆரிப் முகமது கான்.** இவர்கள் அனைவரும் இப்போது எதிர்க்கட்சிகளில் உள்ளனர். **காங்கிரஸ் கட்சி** மட்டுமின்றி **ஜனதா கட்சி, ஜனதா தளம், பாரதீய ஜனதாகட்சி, வலது/ இடது பொதுவுடைமைக் கட்சிகள்,தெலுகு தேசம், அகாலிதளம்** (லோங்கோவால்) **அஸ்ஸாம் கணபரிசத், தேசிய மாநாடு** போன்ற பல்வேறு எதிர்க்கட்சிகளும் தங்களது ஆட்சிக் காலங்களில் 'தடா'வைப் பயன்படுத்தியுள்ளன.

1985-ல் தடா சட்டம் கொண்டுவரப்பட்டபோது 6 மணி நேரம் வாதம் நடைபெற்றது. 34 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 1987-ல் சட்டம் மேலும் கடுமையான பிரிவுகள் இணைக்கப்பட்டு நீட்டிக்கப்பட்டபோது நான்கு மணி நேரம் விவாதம் நடந்தது. 18 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அதற்குப் பிறகு ஒவ்வொரு இரண்டு ஆண்டும் சட்டத்தை நீட்டித்தபோது விவாதத்தில் உறுப்பினர்களின் பங்கேற்பு மிகவும் குறைந்ததாக இருந்தது. கடைசியாக மே 93-ல் சட்டத்தை அரசு முன்மொழிந்தபோது குரல் வாக்கெடுப்பிலேயே அது நிறைவேற்றப்பட்டது. பிரச்சினை யில்லாத வேறொரு சட்டத் திருத்தத்துடன் தடா நீடிப்பைத் தந்திரமாக இணைத்து அரசு முன் வைத்தது. எழுபது நிமிடங்கள் மட்டும் நடைபெற்ற விவாதத்தில் எட்டே உறுப்பினர்கள்தான் பங்கு பெற்றனர்.

பத்திரிகைகளும் கூடப் பொதுவில் 'தடா' சட்டத்தை ஆதரித்தே வந்துள்ளன. சமீபத்தில் **சஞ்சய் தத்** என்கிற திரைப்பட நடிகர்மீது தடா சட்டம் பிரயோகிக்கப்பட்டதை அடுத்து நாடெங்கும் தடா சட்டத்தை ஒட்டி ஒரு விவாதம் நடந்த நிலையில் மைய அமைச்சர்கள், மனித உரிமை ஆணையத் தலைவர் ஆகியோரும் கூட தடாவை எதிர்த்துக் கருத்துக்கள் சொன்னபோது பல பத்திரிகைகள் - தினமணி உட்பட - தடாவை நீட்டிக்கக்கூடாது என எழுதியது குறிப்பிடத்தக்கது. இசுலாமியர்களை வதைக்கப் பயன்படும்

என்கிற நோக்கில் **பாரதீய ஜனதா கட்சி** வெளிப்படையாகவே தடாவை ஆதரித்து வருகிறது. எத்தனையோ பிரச்சினைகளின் அடிப்படையில் பெரிய இயக்கங்களை நடத்தும் எதிர்க்கட்சிகள் இந்த விவாதத்தை ஒட்டிக்கூடப் பெரிய எதிர்ப்பு இயக்கம் எதையும் நடத்தி விடவில்லை. பொதுவாகச் சொல்வதெனில் நமது பிரதான அரசியல் கட்சிகள் எதுவும் மனித உரிமைப் பிரச்னைகளைத் தங்களது நிகழ்ச்சி நிரல்களில் வைத்துக் கொண்டதில்லை.

இந்தப் பின்னணியில் தடா குறித்த ஒரு ஒட்டு மொத்தமான ஒப்புதல் உணர்வு ஒன்று இந்தியா முழுமையிலுள்ள மக்கள் மத்தியிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சி முதலிய தொடர்புச் சாதனங்கள், ரோஜா போன்ற திரைப்படங்கள் இதற்குப் பெரிய அளவில் ஒத்துழைக்கின்றன. பயங்கரவாதிகள் குறித்து இங்கே பூதாகரமாகக் கட்டமைக்கப் படும் பிம்பங்கள் இத்தகைய கறுப்புச் சட்டங்களை நியாயப்படுத்த உதவுகின்றன. தடா சட்டம் போன்றவற்றின் கொடுமையான பிரிவுகள் குறித்தும், எத்தனை ஆயிரம் அப்பாவிகள் இவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் இவை வாய் திறப்பதில்லை. எனவே ஒரு பக்கச் சார்பான செய்திகள் முற்றாக மறைக்கப்பட்டு, இன்னொரு பக்கச் சார்பான செய்திகள் மிகைப்படுத்தப்பட்டு அரசின் சனநாயக உரிமை மீறல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. இன்னொரு பக்கத்தில் இதுவே பயங்கரவாதம் வளர்வதற்குக் காரணமாகவும் ஆகி விடுவதை முன்பே விளக்கியுள்ளோம்.

எனினும், 'தடா' போன்ற சட்டங்களுக்கு முற்றிலும் எதிர்ப்பே இல்லை என நாம் கருதி விட வேண்டியதில்லை. இவ்வளவையும் மீறி ஆங்காங்கு எதிர்ப்புகள் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. **குஜராத்திலும் அஸ்ஸாமிலும்** மக்கள் பங்கேற்ற எதிர்ப்புகள் இருந்தன. அகமதாபாத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் தடா சட்டத்தை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனர். கவ்ஹாத்தியில் பெரிய அளவில் மக்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்களும் மாநாடுகளும் நடைபெற்றன. அறிவுத் துறையினரும் இதில் கணிசமாகப் பங்கேற்றனர். **பஸ்தார்** பகுதியில் தடாவுக்கு எதிராக பந்த் நடத்தப்பட்டது. தனி நீதிமன்றங்களை இட மாற்றம் செய்ய வேண்டுமெனக் காஷ்மீரில் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டார். **பஞ்சாப்பிலும், சண்டிகாரிலும்** வழக்கறிஞர் கள் வேலை நிறுத்தம் செய்தனர். நீதிமன்றங்களைப் புறக்கணித் தனர். **ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கழகம்** (APCLE) தடா கைதிகளுக்குத் தொடர்ந்து சட்ட உதவி செய்து வருகிறது. **சனநாயக உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம்** (PUDR) தொடர்ச்சியாகத் தடாவை எதிர்த்து வெளியீடுகளைக்

கொண்டு வந்துள்ளது. தடா தொடர்பாக மறைக்கப்பட்ட பல்வேறு உண்மைகளை இந்த அமைப்பு வெளிக்கொண்டு வந்துள்ளது.

தமிழகத்தில் ராஜீவ் காந்தி கொலையை அடுத்துக் கடுமையான அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டபோது தடா எதிர்ப்புக் கூட்டியக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுத் தமிழகத்தின் முக்கிய நகரங்கள் பலவற்றில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. **பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், தமிழ் தேசியப் பொதுவுடைமைக் கட்சி, ஜிகாத் கமிட்டி, விடுதலைக் குயில்கள், திலீபன் மன்றம், மக்கள் கல்வி இயக்கம்** போன்ற அமைப்புகள் இதில் முன்னணியில் இருந்தன. **பெருஞ்சித்திரனார்** கைது செய்யப்பட்டபோது **தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி** (கேடயம்)/ **பி.யு.சி.எல்.** போன்ற அமைப்புகள் இயக்கங்கள் நடத்தின. சில மாதங்கள் முன்பு கோவையில் இசுலாமியப் பெண்கள் பெரிய அளவில் பங்கேற்ற **தடா எதிர்ப்பு இயக்கம்** நடைபெற்றது. சமீபத்தில் மீண்டும் தடா எதிர்ப்பு இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டு அதன் முன் முயற்சியில் தடா கைதிகளின் உறவினர்கள் பங்கேற்ற ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று சென்னையில் நடத்தப் பட்டது. **பேராசிரியர் நெடுஞ்செழியனை** விடுதலை செய்யச் சொல்லி கல்லூரி ஆசிரியர்கள் அமைப்பு குரல் கொடுத் துள்ளது. **பி.யு.சி.எல்.** கையெழுத்து இயக்கம் நடத்துகிறது.

இரண்டு மாதத்திற்குள் 'தடா' நீக்கப்படும் எனத் தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர் **ரங்கனாத் மிஸ்ரா** அவர்கள் கூறி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. எடுத்துவிடுவது போலப் பேசிய மைய அரசு இப்போது மௌனம் காக்கிறது.

'தடா'வுக்கெதிரான மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதி மன்றம் சென்ற மார்ச்சில் கிட்டத்தட்ட அப்படியே தடாவை அங்கீகரித்துள்ளது. 'தடா' சட்டம் கொண்டு வருவதற்கு அரசு முன் வைத்த அதே காரணங்களைச் சுட்டிக் காட்டி ஒரு சில அறிவுரைகளை மட்டும் வழங்கி உச்சநீதி மன்றம் தடா சட்டத்தை அங்கீகரித்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சரும் மாநில அரசுகளுக்கும் காவல் துறைக்கும் தடாவைச் சரியாகப் பயன்படுத்துங்கள் என அறிவுரை கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறார். எனவே தடா சட்டத்தை அரசு நீக்கும் என எதிர்பார்ப்பதில் பொருளில்லை. ஒரு சில மாற்றங்களுடன் மீண்டும் 95ல் 'தடா' நீடிக்கப்படும் என நம்புவதற்கு இடமிருக்கிறது.

பிரச்சினை 'தடா'வைச் சரியாகப் பயன்படுத்துவதா, தவறாகப் பயன்படுத்துவதா என்பதல்ல. 'தடா'வைப் பயன்படுத்தவே கூடாது என்பதுதான். ஏனெனில் 'தடா'வைப்

பயன்படுத்துவது என்பதே தவறாகப் பயன்படுத்துவதுதான். அடிப்படையான மனித உரிமைகளைப் பறிப்பதுதான். அடிப்படையான மனித உரிமைக் கோட்பாடுகளுக்கும் நமது அரசியல் சட்டத்திற்கும், சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களுக்கும் எதிராக உள்ள தடா சட்டத்தை மனித உரிமையில் அக்கறையுள்ள அனைவரும் கடுமையாக எதிர்க்க வேண்டிய தருணம் இது.

இதன் முதற்படியாகத் தடாவுக்கு ஆதரவாக அரசு தரப்பில் மக்கள் மத்தியில் கட்டமைக்கப்பட்டிருக்கும் கருத்துக்களைத் தகர்த்தாக வேண்டும். தடா சட்டத்தின் கொடூரமான பிரிவுகளையும், தடா சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சோகக்கதைகளையும் மக்கள் மத்தியில் விளக்கியாக வேண்டும். சிறையில் வாடுபவர்களுக்குச் சட்ட உதவிகள் அளிக்க முன் வரவேண்டும். தடாவுக்கு எதிராக சனநாயக உணர்வுடையோர் குரல் கொடுக்க வேண்டும்.